

காட்பாடி தாராபடவேடு மகளிர் குழு கூட்டமைப்பு செயல்பாடுகளை, புதுச்சேரி உழவர்கரை நகராட்சி கமிஷனர் கந்தசாமி நேற்று பார்வையிட்டார்.

வல்லா, பிடிஓ பானுமதி உட்பட பலர்.

# தாராபடவேடு மகளிர் குழு செயல்பாடு புதுச்சேரி உழவர்கரை அதிகாரி பார்வை

வேலூர், பிப். 21–

*காட்பாடி தாராபடவேடு மகளிர் சுயஉதவிக்குழு கூட்டமைப்பு செயல்பாடுகளை, புதுச்சேரி உழவர்கரை நகராட்சி கமிஷனர் நேற்று பார்வையிட்டார்.*

வேலூர் மாவட்டம், காட்பாடி தாராபடவேடு மகளிர் சுயஉதவிக்குழு கூட்டமைப்பினர் கைவினைப்பொருட்கள், பொம்மைகள், டெய்லரிங் உள்ளிட்ட பல பணிகளை பெண்களுக்கு கற்றுத்தருகின்றனர். மேலும், இந்த கூட்டமைப்பு சார்பில் ஆங்காங்கே குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, பல பணிகளில் ஈடுபட்டும் வருகின்றனர். இதனால், இந்த குழுவில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான பெண்கள் இணைந்து பணியாற்றி வருகின்றனர். இந்த கூட்டமைப்பின் தலைவியாக ஹேமாவதி என்பவர் உள்ளார். இந்நிலையில், இவர்களின் செயல்பாடுகளை அறிந்து, புதுச்சேரி உழவர்கரை நகராட்சி கமிஷனர் கந்தசாமி நேற்று பார்வையிட்டார்.

பின்னர், இதுகுறித்து அவர் கூறியது:

புதுச்சேரி உழவர்கரை நகராட்சியில் மகளிர் சுய உதவிக்குழுக்களில் 490 பேர் உள்ளனர். இவர்கள் 24 அமைப்புகளாக இருக்கின்றனர். இதை மேலும் விரிவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் என்ன, எப்படி பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது என்பது உள்ளிட்ட பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம்.

இந்நிலையில், வேலூர் மாவட்டம் தாராபடவேடு மகளிர் சுயஉதவிக்குழு கூட்டமைப்பு தங்களின் குழுக்களை விரிவுபடுத்தியும், பெண்களை பெரும்பாலான பணிகளில் ஈடுபடுத்தியும் வருவதை அறிந்தோம். அவர்களின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது, என்னென்ன கைவினைப்பொருட்கள், பொம்மைகள், உணவுப் பொருட்கள் தயாரிக்கின்றனர் என்பது உள்ளிட்டவற்றை பார்வையிட வந்தோம்.

பின்னர், அதுகுறித்து கேட்டறிந்தோம். தொடர்ந்து, எங்கள் நகராட்சியில் உள்ள மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.

மேலும், கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட எல்லா பொருட்களும் உற்பத்தி செய்வதற்கான பயிற்சி அளித்தும், அதை ஆன்லைன் வர்த்தகமான அமேசான், பிளிப்கார்ட், உள்ளிட்டவற்றில் விற்பனை செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணிகளை செய்து வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அப்போது, புதுச்சேரி நகராட்சி உதவி திட்ட அலுவலர் கருணாநிதி, சமூகஅலுவலர் மோகன் வைத்தியநாதன், ஜான் மற்றும் நாகநதி ஆகியோர் உடனிருந்தனர்.

